## திருவள்ளூர் தொகுதிக்கு ‘திராவிடமாடல்’ ஆட்சியில் பல்வேறு திட்டங்கள்!

# திருவள்ளூர் வெளி வட்டச் சாலையை விரைந்து நிறைவேற்றிடுக!

### சட்டப்பேரவையில் நகராட்சி – குடிநீர் வழங்கல் துறை மானியக் கோரிக்கையில் வி.ஜி.இராஜேந்திரன் வலியுறுத்தல்!



**சென்னை, மார்ச். 26–**
**திருவள்ளூர் வெளி வட்டச் சாலையை விரைந்து முடித்திட வேண்டும் என்று சட்டப் பேரவையில் நகராட்சி – குடிநீர் வழங்கல் துறை மானியக் கோரிக்கையில் திருவள்ளூர் தொகுதி உறுப்பினர் வி.ஜி. இராஜேந்திரன் கோரிக்கை விடுத்தார்.**

சட்டப்பேரவையில் நகராட்சி - குடிநீர் துறை மானியக் கோரிக்கையில் திருவள்ளூர் தொகுதி உறுப்பினர் வி.ஜி.இராஜேந்திரன் பேசியதாவது

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், பொது வாழ்க்கையில் மக்களோடு செல், மக்களோடு வாழ் என்ற பொன்மொழியினைக் கூறிய பேரறிஞர் அண்ணா அவர்களின் திசை நோக்கி வணங்குகிறேன்.

இராஜராஜ சோழனுக்கு சிலையெடுத்து, திருவள்ளுவருக்கு குமரியில் 133 அடி உயரம் சிலை அமைத்து, தாய்மொழி, தமிழ்க்கு செம்மொழி அங்கீகாரம் பெற்றுத்தந்து, ஆயிரம் தலைமுறை கடந்தும், சிறப்போடு, தமிழ் மக்கள் வாழ, நவீன தமிழ்நாட்டை உருவாக்கிய சிற்பி, என்றும் எங்கள் நினைவில் வாழும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திருவள்ளூர் சிலைக்கு அருகில் கண்ணாடி இழை பாலம்!**

முக்கடல் சங்கமிக்கும் கன்னியாகுமரியில் தலைவர் கலைஞர் அவர்களால் நிறுவப்பட்டு, தற்போது வெள்ளி விழா கண்ட திருவள்ளுவர் சிலைக்கும், சுவாமி விவேகானந்தர் பாறைக்கும் இடையே கண்ணாடி இழை பாலம் அமைத்தும், தாய்மொழி தமிழுக்காகவும் மட்டுமல்லாமல் ஒவ்வொரு மாநிலத்திலும் பேசும் மக்களின் தாய்மொழிக்காக போராடும் மக்களின் தலைவராக, மாநில உரிமைகளை பறிக்கும், எந்த ஆதிக்க சக்தி வந்தாலும், அந்த நிலையில் எதிர்த்து போராடும் எங்களுடைய தலைவர், கழகத் தலைவர், திராவிட மாடல் ஆட்சியின் முதல்வர், (மேசையைத் தட்டும் ஒலி) இன்று அனைத்து மாநில மக்களும், மாநில முதல்வர்களும், அவரை நோக்கி உற்றுப்பார்க்கும் வகையில் இன்றைக்கு ஆட்சியை நடத்திக்கொண்டிருக்கக்கூடிய நம்முடைய முதல்வர் அவர்களை வணங்குகிறேன்.

இன்றைக்கு அரசின் முன்னோடித் திட்டமான, திராவிட மாடல் ஆட்சியின் திட்டமான விடியல் பயணத் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம், புதுமைப்பெண் திட்டம், முதலமைச்சரின் காலை உணவு திட்டம், நான் முதல்வன் திட்டம், இரண்டு கோடி மக்களைத் தாண்டிப் பயன்பெறும் வகையில், மக்களைத் தேடி மருத்துவம் என்கின்ற அந்தத் திட்டம் என நம் தலைவர்களாலும், மூத்த தலைவர்களாலும் நினைத்துப் பார்க்க முடியாத திட்டங்களை நிறைவேற்றுகிற தலைவர் அனைத்துத் தரப்பு மக்களும், பாராட்டுகிற மக்கள் தலைவராக இருக்கக்கூடிய முதலமைச்சர், எங்கள் கழகத் தலைவர் அவர்களை வணங்குகிறேன்.

**மகன் தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை**
**என்நோற்றான் கொல்லெனும் சொல்**

என்ற வள்ளுவரின் குறளுக்கேற்ப ஒரே வார்த்தையில், ஒன்றியத்தையே அதிர வைத்த எங்கள் சின்னவர், ஒவ்வொரு விளையாட்டு வீரர்களையும், எங்கு செயல் திறன் இருக்கிறதோ, அவர்களைத் தேடி, கண்டு உலக சாதனையாளர்களாக மாற்றும் சாதனையாளர் இலட்சோப இலட்ச இளைஞர்களின் தத்துவங்களின் தலைவராக, திராவிட இயக்கத்தின் நம்பிக்கை, எந்த பணியை எடுத்தாலும், நிறை குடமாக திகழ்பவர், முழு நிலவாக சிறப்பவர், எங்கள் துணை முதலமைச்சர் அவர்களுக்கு, என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அவை முன்னவரும், கழக பொதுச் செயலாளரும், நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும், என்னுடைய வணக்கத்தைக் கூறி, இந்தத் துறையினுடைய அமைச்சர், நேரு அவர்களுக்கு என்னுடைய வணக்கம்.

**திருவள்ளூர் தொகுதிக்கு பல்வேறு திட்டங்கள்!**

நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில், திருவள்ளூர் தொகுதியிலே, பல்வேறு நல்ல திட்டங்கள் இந்த நான்கு ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்டது. அதை ஒன்றிரண்டு குறிப்பிட்டு சொல்லவேண்டும், ஏனென்றால் நன்றி சொல்லவேண்டிய கடமையில் நான் இருக்கின்றேன். காரணம் என்னவென்றால், திருவள்ளூர் தொகுதியில்தான், இன்றைக்கு நகராட்சியில் நிறைய பணிகள், அதாவது Bus stand திருவள்ளூரில் நகரத்தில், மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான 33 கோடி ரூபாய் மதிப்பில் bus stand இப்போது கட்டப்பட்டு வருகிறது. அதற்கு நமது திராவிட மாடல் ஆட்சியில் நடக்கக்கூடிய மிகப் பெரிய சாதனை. காலை உணவு திட்டத்தை இன்றைக்கு அந்த aided schools முதலமைச்சர் அவர்கள் நேரடியாக வந்து, கீழச்சேரியில் இருக்கக்கூடிய பள்ளியில் அவரே தொடங்கி வைத்தது, இதைவிட மிகப் பெரிய பெருமை. (மேசையைத் தட்டும் ஒலி)

பூண்டி ஒன்றியத்தில், நெமிலி அகரம் ஊராட்சியில், கொசஸ்தலை ஆற்றின் குறுக்கே 13 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் பாலம் ஒன்று இப்போது கட்டப்பட்டு வருகிறது. கடம்பத்தூர் ஒன்றியம், மப்பேடு ஊராட்சியில் மட்டும் 1,200 கோடி ரூபாய் dry port, உலர் துறைமுகப் பணிகள் துவங்கப்பட்டிருக்கிறது. இதெல்லாம் பார்த்தீர்களென்றால், மற்ற ஆட்சியில் எல்லாம், கடந்த ஆட்சியில் என்னென்ன நடந்தது என்று தெரியும். கடந்த ஆட்சியில் என்னென்ன விட்டுவிட்டு சென்றார்கள் என்று தெரியும். அவர்களால் ஒரு பாலத்தைக்கூட முடிக்க முடியாத சூழல் எல்லாம் அன்றைக்கு இருந்தது மாறி இன்றைக்கு அனைத்துமே நல்லத் திட்டங்கள் மக்களை நோக்கி சென்று கொண்டிருக்கிறது.

நெடுஞ்சாலைத் துறை சார்பாக வேலு அவர்கள் துறையில் திருவாலங்காடு முதல் அரக்கோணம் வரை இரண்டு வழிச் சாலையாக இருந்தது, இப்போது நான்கு வழிச் சாலையாக இன்று மாற்றப்பட்டு வருகிறது. இதுமட்டுமில்லை, இன்றைக்கு நகராட்சியில் ஒரு பள்ளி இருந்தது, இரண்டே இரண்டு groundல்தான் அந்தப் பள்ளி. 2 Ground-ல் +2 வரையில் மாணவர்கள் படித்துக் கொண்டிருந்தார்கள்.

**பள்ளிக்கட்டிடம்!**

அதை, முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்ற பிறகு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் அங்கு சென்று பார்வையிட்டார்கள். நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களிடம் இதுகுறித்து தெரிவித்த போது, அண்ணன் அவர்கள் உடனடியாக ரூ.3 கோடி கொடுத்தார்கள். Land எங்கே என்று கேட்டார்கள்? நகரத்தில், RTO Office அருகில் இருக்கக்கூடிய நிலம். அந்த இடம் 17 ஆண்டுகளாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் ஒருவரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு, அங்கு cycle stand நடத்திக் கொண்டிருந்தார். அந்த இடம் உடனடியாக மீட்கப்பட்டு, தற்போது அங்கு பள்ளிக் கட்டடம் கட்டி முடிக்கப்படும் நிலையில் இருக்கிறது. பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களும் அங்கு வந்து பார்வையிட்டார்கள். இவ்வாறான பணிகள் திராவிட மாடல் ஆட்சியில் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன.

கடந்த ஆட்சியில், மக்களின் அடிப்படைத் தேவைகளான குடிநீர், பாதாள சாக்கடை, சாலைகள், தெருக்கள், மின் விளக்குகள் போன்ற எந்த திட்டத்தையும் அவர்கள் செயல்படுத்தவில்லை. 2021 ஆம் ஆண்டு, நம் திராவிட மாடல் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, மக்கள் மனநிலையைப் புரிந்துகொண்டு, மக்களுக்கு என்ன தேவையென்று முதலமைச்சர் அவர்கள், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களை அழைத்து, படிப்படியாக என்னென்ன திட்டங்களைச் செய்ய வேண்டும், அதற்கு எவ்வளவு நிதி ஒதுக்க வேண்டும் என்பதை ஆய்ந்து, மக்களுக்கான திட்டங்களை செய்திருக்கிறார்கள். அதில் ஒரு சிலவற்றை மட்டும் சொல்கிறேன்.

மத்திய பொது சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல், பொறியியல் அமைப்பு, நகர்ப்புர வாழ் மக்களுக்கு தினசரி வழங்க நிர்ணயம் செய்துள்ள குடிநீர் அளவினை வழங்க தமிழகம் முழுவதும் குடிநீர் ஆதாரங்களை கண்டறிந்து, புதிய குடிநீர் திட்டங்களை ஏற்படுத்தியும், ஏற்கெனவே உள்ள குடிநீர் திட்டங்களை புதுப்பித்தும், வலுப்படுத்தியும் முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறார். நகர்ப்புர உள்ளாட்சிகளில் சோதனை ஓட்டமாக, 24 மணி நேர குடிநீர் திட்டத்தை செயல்படுத்தி, 12 மாநகராட்சிகளிலும், 2 நகராட்சிகளிலும் 24 மணி நேரமும் குடிநீர் வழங்குவதற்கான திட்டம் நடைபெற்று வருகிறது.

**பில்லூர் – III**
**புதிய திட்டங்கள்!**

கோயம்புத்தூர் மாநகராட்சியில் மட்டும், நமது உறுப்பினர் அவர்கள் எழுந்து சென்று விட்டார். வேலு அவர்கள், அந்தத் துறையின் அமைச்சராக இருந்தவர் மற்றும் கொங்கு மண்டலத்தின் ஓர் அமைச்சராக இருந்தவர். அவர் கேட்டுவிட்டுச் சென்றிருக்கலாம். கோயம்புத்தூர் மாநகராட்சியில் மட்டும் குடிநீர் தேவையினைப் பூர்த்தி செய்ய, 2024-2025 ஆம் ஆண்டில் 740 கோடியே 15 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பில்லூர்-III போன்ற புதிய திட்டங்கள் இன்றைக்கு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

மதுரை மாநகராட்சியில், முல்லைப் பெரியாறு அணையிலிருந்து ஆண்டு முழுவதும், தினசரி 125 MLD குடிநீர் வழங்க திட்டம் நடைபெற்று வருகிறது. 40-க்கும் மேற்பட்ட நகர்ப்புர உள்ளாட்சிகளில் பாதாள சாக்கடை திட்டம் 1,646 கோடி ரூபாயில் இன்றைக்கு நடைபெற்று வருகிறது. மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளில் 12 ஆயிரம் கிலோ மீட்டர் சாலைகள், சாலைகள் இன்றைக்கு அனைத்து நகராட்சிகளிலும் புதுப்பிக்கப்பட்டு, தெரு விளக்குகள் முழுவதுமாக போடப்பட்டிருக்கிறது. LED lamp, கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் 4.63 இலட்சம் எண்ணிக்கையிலான புதிய LED விளக்குகள் அமைக்கப்பட்டு, தமிழகம் இரவிலும் பகல் போல் காட்சியளிக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

**புதிய பேருந்து நிலையங்கள்!**

560.72 கோடி மதிப்பீட்டில், 60-க்கும் மேற்பட்ட புதிய பேருந்து நிலையம் இன்றைக்கு தமிழகம் முழுவதும் கட்டப்பட்டு வருகிறது. 470 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 145-க்கும் மேற்பட்ட சந்தைகள் அமைக்கப்பட்டு, மக்கள் பயன்பாட்டில் உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) 120 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 96-க்கும் மேற்பட்ட நூலகங்கள், அறிவுசார் மையங்களில் மாணவ மாணவியர்கள் பயன்பெறும் வகையில் போட்டித் தேர்வுக்கான பயிற்சி மையங்களாக இன்றைக்கு நூலகங்கள் அமைக்கப்பட்டு, முதலமைச்சர் அவர்களால் video conference மூலம் திறக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதில் திருவள்ளூர் நகராட்சியும் ஒன்று. இதன்மூலம் 15 நபர்கள் Group-IV, Group-II தேர்வுகளை எழுதி, வெற்றிப்பெற்றிருக்கிறார்கள்.

84 உள்ளாட்சிகளில், 25 இலட்சம் கன மீட்டர் கொள்ளளவில் பழைய திடக் கழிவுகள் அகற்றப்பட்டு, 400 ஏக்கர் நிலம் மீட்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) 6 நகராட்சிகளில் மட்டும் குப்பைகள், செறிவூட்டப்பட்ட எரிவாயு, bio-CNG ஆலை அமைக்கப்பட்டிருக்கிறது. இவ்வளவு அடிப்படை வசதிகளையும் நிறைவாக தமிழக மக்களுக்கு வழங்கிவரும் முதலமைச்சர் அவர்களுக்கும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்தில் நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறோம்.

**இரயில்வே பாலம்!**

எங்களின் நீண்டநாள் கோரிக்கை, திருவள்ளூர் by pass சாலை, புறவழிச் சாலை. முதலமைச்சர் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும்போதுகூட அங்கு வந்து அறிவித்திருக்கிறார். அதனுடைய பணி இன்றைக்கு துவங்குகின்ற நிலையில் கிட்டத்தட்ட இரண்டாம் கட்டமாக நில எடுப்பு பணிக்காக ரூ.89 கோடி பொதுப் பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள். அதற்காக இந்த நேரத்தில் நன்றி சொல்வது மட்டுமல்லாமல், முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்லிக்கொள்கிறேன்.

இரயில்வே பாலப் பணிகள் உடனே செயல்படுத்தி, மக்கள் பயன்பாட்டிற்கு வந்தால், நிச்சயம் திருவள்ளூர் நகரத்தில் இருக்கக்கூடிய traffic நிச்சயமாக குறையும்.

அதேபோல, திருவள்ளூரில், கடம்பத்தூர் ஒன்றியத்தில் இருக்கக்கூடிய நரசிம்மர் கோயிலுக்கு குடமுழுக்கு செய்ய வேண்டுமென்று கேட்டிருக்கிறேன். இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களிடமும் கேட்டிருக்கிறோம். உடனடியாக அந்தத் திருப்பணிகள் நடைபெற வேண்டும். குறிப்பாக குடமுழுக்கு தமிழில் நடைபெற வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

முதலமைச்சர் அவர்களுக்காக ஒரே ஒரு பாட்டு பாட வேண்டும். இவ்வளவு திட்டங்களை திருவள்ளூர் தொகுதிக்கு மட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதும் கொடுத்திருப்பது மட்டுமல்ல, காலையில் குழந்தைகளுக்கு சிற்றுண்டி கொடுத்திருக்கிறார்களே, அந்தக் குழந்தைகள் எந்த அளவிற்கு அன்போடு அவர்களை ‘அப்பா’ என்று அழைக்கிறார்கள். எல்லா குழந்தைகளுக்கும் அப்பாவாக தாயுள்ளம் கொண்ட நம்முடைய முதலமைச்சர் அவர்கள் திகழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்காக ஒரே ஒரு பாடலை இந்த அவையில் காணிக்கையாக்குகிறேன். இரண்டு வரி தான்.

**கொடுத்ததெல்லாம் கொடுத்தார்**
**அவர் யாருக்காகக் கொடுத்தார்**
**ஒருத்தருக்கா கொடுத்தார், இல்லை**
**ஊருக்காகக் கொடுத்தார்**
**ஒருத்தருக்கா கொடுத்தார், இல்லை**
**தமிழ்நாட்டு மக்களுக்காகக் கொடுத்தார்**
**மண் குடிசை வேண்டாமென்று**
**கலைஞர் வீடு கட்டித் தந்தார்**
**மழலைகள் பசியாற**
**காலை உணவு அள்ளித் தந்தார்**

அவ்வளவுதான். நன்றி சொல்லி அமைகிறேன். பேரவைத் தலைவர் அவர்களுக்கும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், நமது கொறடா அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், என் தொகுதியை சார்ந்திருக்கக்கூடிய, என்னை இரண்டாவது முறையாக தேர்ந்தெடுத்து அனுப்பிய வாக்காளர்களுக்கும், என்னுடைய கழக நிர்வாகிகளுக்கும், கூட்டணி கட்சி தோழர்களுக்கும் நன்றி.

இவ்வாறு வி.ஜி.இராஜேந்திரன் பேசினார்.




முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (25.03.2025) சென்னை, எழும்பூர், தாளமுத்து நடராஜன் மாளிகையில் உள்ள சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அலுவலகக் கூட்டரங்கில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு தலைமையில் 2025–2026ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற கூட்டத் தொடரில் அறிவிக்கப்படவுள்ள புதிய அறிவிப்புகள் குறித்த ஆய்வுக் கூட்டம் துறை சார்ந்த அலுவலர்களுடன் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் டாக்டர் சு.பிரபாகர், முதன்மைச் செயல் அலுவலர் அ.சிவஞானம், தலைமைத் திட்ட அமைப்பாளர்கள் எஸ். ருத்ரமூர்த்தி, அபாலசுப்ரமணியன், ந.ரவிக்குமார். கண்காணிப்புப் பொறியாளர்கள் ராஜமகேஷ்குமார், மா.பாலமுருகன் தலைமை நிர்வாக அலுவலர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# அன்னம் தரும் அமுதகரம் 34வது நாள்!

### வில்லிவாக்கம் கிழக்குப் பகுதியில் அமைச்சர் பி.கே. சேகர்பாபு உணவு வழங்கினார்!





சென்னை, மார்ச் 26-
சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், கழக தலைவர் - முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு, வெவ்வேறு இடங்களில் அன்னம் தரும் அமுதகரங்கள் சிறப்புமிகு திட்டத்தின் 34வது நாள் வில்லிவாக்கம் கிழக்கு பகுதி இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் உணவு வழங்கினார்கள்.

வில்லிவாக்கம் கிழக்குப் பகுதியில் முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 34 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளில் நேற்று (25.3.2025) வில்லிவாக்கம் கிழக்கு பகுதி 1) லக்மா நகர், அயனாவரம், சென்னை. (98 அ வட்டம்) 2) அம்பேத்கர் ப்ளே கிரவுண்ட், சோலையம்மன் கோயில் தெரு, திருவள்ளுவர் நகர், அயனாவரம், சென்னை (98வது வட்டம்) ஆகிய பகுதிகளில் - இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் “தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இது தான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் அ. வெற்றி அழகன் எம்.எல்.ஏ, கூ.பீ.ஜெயின், வே. வாசு, லதா வாசு.எம்.சி. டி.வி. செம்மொழி.எம்.சி. சாவித்திரிவீரராகவன், சுதா தீனதயாளன்.எம்.சி வானவில் விஜய், எம்.சுரேஷ் வில்லிவாக்கம் கிழக்கு / மேற்கு வட்ட கழக செயலாளர்கள்: எ.வேதா, சீ.வீக்னேஷ், ச. மனோகரன், கே.பாஸ்கர், எ.தேவராஜ், காஞ்சி செ.துரை, சிட்கோ சி.சேகர், ஆர்.தீனதயாளன், க.சுகுமாரன், மா.அகிலன், ஜானி(எ) உமாசங்கர், சொ.முருகேசன், ப.லோகுபாபு, ஒருங்கிணைப்பாளர்கள்: சொ. வேலு, எஸ்.முரளி, பெரம்பூர் ஆர்.ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக் குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### டி.ஆர்.பாலு எம்.பி. – அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! எம்.டி.ஆர்.நாகராஜ் தலைமை!

# அம்பத்தூர் கிழக்கில் முதல்வரின் மனிதநேய விழா - புகழரங்கம்!

### எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. – கோ.விசுவநாதன் – இயக்குநர் எஸ்.பி.முத்துராமன் – நடிகர் நாசர் சிறப்புரை!

சென்னை, மார்ச் 26-
சென்னை கிழக்கு மாவட்டம், அம்பத்தூர் கிழக்குப் பகுதி தி.மு.க. சார்பில் மக்கள் முதல்வரின் மனிதநேய விழா - மாபெரும் புகழரங்கம் இன்று (26.3.2025- புதன்கிழமை) மாலை 6 மணிக்கு கிரண் பேலஸ் கொரட்டூர் சென்னையில் நடைபெறுகின்றது.

மனிதநேயம் - 34 - துறை தோறும் முன்னேற்றம், சூரியனே வழிகாட்டும் என்ற தலைப்பில் நடைபெறும் இவ்விழாவிற்கு கிழக்கு பகுதிச் செயலாளர் எம்.டி.ஆர். நாகராஜ் தலைமை வகிக்கிறார். கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., மாவட்டச் செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு, ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ. , பி.கே.மூர்த்தி, டி.எஸ்.பி. இராஜகோபால், வி.ரமேஷ் என்கிற நீலகண்டன், எல்.டி.எம். மோகன், டாக்டர் ஜி.சாந்தகுமாரி, டாக்டர் ஏ.பி.பூர்ணிமா, ஜெ.பாலமுருகன், உஷா நாகராஜன், கு.கிருஷ்ணமூர்த்தி, து.ஆயிரம், ஜி.வி.நாகவள்ளி, து.ஜெகநாதன், பி. ஆர்.இளங்கோவன், மு.சண்முகம், ஆ.சுந்தர்ராஜ், மா.பொற்செழியன், ரா. லட்சுமி ரங்கசாமி, வேளச்சேரி இ.ராமு, சீ.லோகநாதன், க.மோகன்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கே.செல்வம், கோ.முத்துகுமாரசாமி, கோ.ராஜ்குமார், ந.குமரவடிவேல், ச.கோதண்டன், கோ.இன்பசேகரன், இ.நடராஜன், ஆர். விமலன், ஜெ. ஐயப்பன், எஸ்.பரமசிவம் ஆகியோர் வரவேற்றுப் பேசுகின்றனர்.

இவ்விழாவில் எஸ். ஜெகத்ரட்சகன் எம்.பி., வி.ஐ.டி. பல்கலைக்கழக வேந்தர் முனைவர் கோ. விசுவநாதன், திரைப்பட இயக்குநர் எஸ்.பி. முத்துராமன், நடிகர் நாசர் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

இதில் மேயர் பிரியா ராஜன், ப.தாயகம் கவி எம்.எல்.ஏ., அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ., சன். முனியாண்டி மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.

மு.விஜயகுமார், த.வ.லால் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.



பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி 26வது வார்டில் ரமலான் பண்டிகையை முன்னிட்டு வட்டக் கழகச் செயலாளர் சா. முஜிபுர் ரகுமான் தலைமையில் 200 இஸ்லாமிய சகோதர குடும்பங்களுக்கு பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி மண்டலத் தலைவர் பகுதி செயலாளர் இ.ஜோசப் அண்ணாதுரை ஆகியோர் அரிசி மளிகை சாமான்கள் கொண்ட தொகுப்பை வழங்கினார்கள். பல்லாவரம் தெற்கு பகுதி கழகச் செயலாளர் இ. எஸ். பெர்னார்ட் பகுதி இளைஞரணி அமைப்பாளர் எஸ்.சாகுல் ஹமீது, ஹக்கீம் பகுதி நிர்வாகிகள் வட்டக் கழக நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்.

### புழல் எம். நாராயணன் ஏற்பாட்டில்

# மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் முதலமைச்சர் பிறந்தநாள் விழா!

### கழக அரசின் சாதனைகளை விளக்கி திண்ணை பிரச்சாரம் !

மாதவரம், மார்ச்.26-
சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில், தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்களின் 72 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, கழக கொடி ஏற்றி கழக அரசின் சாதனைகளை விளக்கி துண்டு பிரசுரங்கள் வீடு வீடாக வழங்கி திண்ணை பிரச்சாரம் செய்யப்பட்டது.

மாதவரம் வடக்கு பகுதி 17 வது வட்டம், கொசப்பூர் பகுதியில் அமைந்துள்ள தியாகி விஸ்வநாததாஸ் நகர் பகுதியில், தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் ஏற்பாட்டில் கழகக் கொடியேற்றி பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

17வது வட்டச் செயலாளர் கே.கருணாகரன் தலைமையில், வட்டக் கழக நிர்வாகிகள் சி.மூர்த்தி, சி. பாலாஜி, மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் கே.சண்முக பிரியன், பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எம்.என். அஜய் தென்னவன், பகுதி மகளிர் அணி துணை அமைப்பாளர் சரஸ்வதி கலைமணி ஆகியோர் முன்னிலையில், திராவிட மாடல் அரசின் சாதனைகளை துண்டு பிரசுரங்களாக அச்சிட்டு வீடு வீடாக வழங்கப்பட்டது.

இல்லம் தேடி கல்வி, நம்மை காக்கும் 48, மகளிர் உரிமைத் தொகை ஆயிரம், பெண்களுக்கு இலவச பயணம், காலை உணவு திட்டம் போன்றவை மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் அச்சடிக்கப்பட்டு பொதுமக்களுக்கு வீடு வீடாக பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் வழங்கி திண்ணை பிரச்சாரம் மேற்கொண்டார்.

துண்டு பிரசுரங்களை பெற்றுக் கொண்ட பொது மக்கள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பொற்கால ஆட்சியில் எங்களுக்கான சலுகைகள் அனைத்தும் கிடைப்பதால், மீண்டும் 2026 இல் தமிழ்நாடு முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு தான் வாக்களிப்போம் என்று வாக்களித்தனர்.

இந்த துண்டு பிரசுரமாக நிகழ்ச்சியில் மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுனர் அணி துணை அமைப்பாளர் எஸ்.சிவக்குமார், விவசாய அணி துணை அமைப்பாளர் டி.வினோத்,ஜி.ராஜ்குமார், பாக முகவர்கள் என்.நாகராஜன், டி.திவாகர், வி.சுமீர், ஜி.கார்த்திக், வடபெரும்பாக்கம் மைக்கேல், பி.செந்தில், இ.கார்த்திக், சின்ன தோப்பு ஜி.முனிவேல், கமலநாதன், வழக்கறிஞர் எம். என்.தளபதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.




மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில், கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்தநாளை முன்னிட்டு, 17 வது வட்டம் தியாகி விஸ்நாத தாஸ் நகர் பகுதியில், வட்டச் செயலாளர் கே .கருணாகரன், பகுதி பிரதிநிதி சி. மூர்த்தி, கே. சண்முகப்பிரியன், பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எம். என். அஜய் தென்னவன், சரஸ்வதி கலைமணி ஆகியோர் முன்னிலையில், கழக கொடி ஏற்றி, கழக அரசின் சாதனைகளை விளக்கி, வீடு வீடாக துண்டு பிரசுரங்கள் வழங்கி, திண்ணை பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. இந்த நிகழ்வில் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் என திரளாக பலர் கலந்து கொண்டார்கள்.